# DETERMINANTS OF WOMEN INCOME

**Sakitha Piratheesan**
*University of Jaffna*
*tsakitha@gmail.com*

## ABSTRACT

The rate of participation of women labour force is very low, when comparing in the developing countries with that of the developed countries. The cardinal object of this study is to find out the deciding factors relating to the income of the women. For this study data was collected from 100 labour force women respondents who were selected based on random sampling through questionnaire survey. The collected data was analyzed by SPSS software package. Based on the results of the analysis, this study finds that the main factor influencing the income earning of women is the level of education. The correlation between women income and education level is 0.73 and the coefficient between these two variables is 0.67 ($p = 0.001$). Thus, the level of education is strong positive in determining the income of women.

**Keywords**: Labour Force Women, Educational Qualification, Women Income

## ஆய்வின் அறிமுகம்

ஒரு நாட்டின் ஊழியப்படையில் பெண்களின் பங்களிப்பு என்பது பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு அத்தியாவசியமானதொன்றாகும். ஊழியப்படையில் பெண்களின் பங்களிப்பு என்பது நாடுகளுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படுகின்றது. குறிப்பாக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளோடு ஒப்பிடும்போது பெண்களின் பங்களிப்பு என்பது மிகவும் உயர்வாகவே காணப்படுகின்றது. ஒரு நாட்டில் உருவாகும் பொருளாதார முன்னேற்றமானது விவசாயத்துறையில் இருந்து கைத்தொழில் துறை சார்ந்ததாக மாற்றமடையும் போது பெண்களின் வருமானத்திலும் அதிகரிப்பு காணப்படுகின்றது. உலக வங்கியின் தரவுத்தளத்தின் படி இலங்கையில் ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்துக்கிடையே பாரிய வேறுபாடானது காணப்படுகின்றது. இதற்குக் காரணமாக அமைவது பெண்களின் ஊழியப்படை பங்களிப்பு வீதம் ஆனது ஆண்களோடு ஓப்பிடும்போது மிகக் குறைவாகும்.

பெண்கள் தொழில் புரியும் தன்மை என்பது பொருளாதார ரீதியாக பெண்கள் பெறும் முக்கியத்துவத்தினை எடுத்து விளக்கப் பயன்படுகின்றது. இலங்கையினைப் பொறுத்து நோக்குகின்ற போது ஆண்களோடு ஒப்பிடும்போது தொழிற்படையில் பெண்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுகின்றது. பெண்களிடயே வருமானத்தை தீர்மானிக்கும் காரணிகளில் கல்வித்தகைமை என்பது பிரதான காரணியாக உள்ளது. அதிலும் குறிப்பாக பல்கலைக்கழக கல்வியுடனான பட்டப்பின்படிப்பானது வருமானத்தை அதிகரிப்பதில் நேரக்கணிய பங்களிப்பை செலுத்துகின்றது. மேலும் கல்வித் தகைமையானது இனரீதியான பாகுபாடுகளினை குறைப்பதோடு மட்டுமல்லாது பால் ரீதியான பாகுபடுகளினையும் குறைக்கின்றது இலங்கையில் கடந்த காலப்பகுதியில் சமூக பொருளாதார ரீதியான காரணிகளில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு பிரதான காரணியாக பால் ரீதியான பாகுபாடு குறைவடைந்தமைக்கு (கல்வி, சுகாதாரம் வேலை பெறும் சந்தர்ப்பங்கள்) என்பது பங்களிப்பை வழங்கியிருந்தது. ஒரு நாடு வறிய நிலையில் காணப்படும் பட்சத்தில், அந்நாட்டில் பெண்களின் ஊழியப்படை வகிபாகம் என்பது மிக அவசியமான தொன்றாகும். இலங்கையில் கிராம நகர பெருந்தோட்ட ஆகிய துறைகள் சார்ந்து நோக்குகின்ற போது பெருந்தோட்ட துறையில் பெண்களின் பங்களிப்பு என்பது ஏனைய துறைகளோடு ஒப்பிடும் போது உயர்வாகவே உள்ளது. இவ்வாறாக வேலை செய்யும் பெண்களின் வருமானத்தினை தீர்மானிப்பதில் ஏராளமான காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றது. அந்த வகையினிலே இவ் ஆய்வானது வேலை செய்யும் பெண்களின் வருமானத்தினை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை இனங்கண்டு ஆய்வு மேற்கொள்வதினை நோக்காகக் கொண்டு ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயத்துறையில் இருந்து கைத்தொழில் துறை ரீதியான பொருளாதார நகர்வானது ஏராளமான பெண்கள் வேலை புரியும் சந்தர்ப்பத்தை உருவாக்குகின்றது.

இவ் ஆய்வானது நல்லூர் பிரதேச செயலகத்தில் தொழில் புரிகின்ற பெண்களிடையே வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு ஆய்வுக்கான தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. பொதுவாக ஆண்கள் மற்றும் பெண்கள் பெறும் வருமானத்தில் வேறுபாடு ஏற்படுத்தக்கூடிய வகையில் உள்ள காரணிகளாக சமூக, பொருளாதார காரணிகள் உள்ளன. குறிப்பாக பெண்கள் பல்வேறு பட்ட துறைகளிலும் தொழில் புரிவோராக உள்ளனர். அந்த வகையில் அரசதுறை, தனியார்துறை, கைத்தொழில் சார்ந்த துறைகள், சுய தொழில் நடவடிக்கைகள் போன்றவற்றில் பணி புரிகின்றனர். இது வேலை புரியும் பெண்கள் பெருகின்ற வருமானமும் பெண்களுக்குள் தொழிலுக்கு தொழில் வேறுபட்டுக் காணப்படுகின்றது. பெண்களின் கல்விநிலைமை, தொழில் ரீதியான அனுபவங்கள் இனரீதியான பாகுபாடுகள், சமயம், விவாகநிலை போன்ற பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றது.

**ஆய்வின்நோக்கம்**

இவ் ஆய்வின் நோக்கமாக பெண்களின் வருமானத்தினை தீர்மானிக்கும் காரணிகளை இனங்காணுதலை நோக்கமாகக் கொண்டது.

**இலக்கிய மீளாய்வு**

Verick என்பவரால் 2014 இல் மேற்கொண்ட ஆய்வில் கல்வி நிலைத்தகைமை/ கல்வித்தகுதி என்பது பெண்களிடையே சிறந்த தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்வதற்கான பிரதான மூலமாகத் திகழ்கின்றது. இதனை அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் இரண்டிலுமே அவதானிக்க முடிகின்றது. பெண்களைப் பொறுத்து ஆண்கள் தமது கல்வி நிலைத்தகுதிக்கேற்ப தமது சம்பளத்தை எதிர்பார்க்கின்றனர். பொதுவாகவே பெண்களின் கல்வி நிலையில் முன்னேற்றம் ஏற்படும் பட்சத்தில் அது அவர்கள் சிறந்த தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கானமூலோபாயமாகஅமையும் என்ற முடிவு பெறப்பட்டுள்ளது.

Bhattarai மற்றும் wismicwski ஆகியோரால் 2002 இல் மேற்கொண்ட ஆய்வில் ஐக்கிய இராச்சியத்தின் தொழில் சந்தையில் கூலியானது தொழிலாளர்களின் மத்தியில் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது என்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஆண், பெண் என்ற இருபாலரையும் பொறுத்த வரையில்,

போன்ற காரணிகள் நேரான இணைபை கூலி நிர்ணயத்துடன் கொண்டுள்ளது. மேலும் தொழில் தகைமையுடன் இணைந்ததான தொழில்கள், முகாமை மற்றும் தொழில்நுட்ப ரீதியான தொழில்கள், இராணுவப் படைசார்ந்த தொழில்கள் போன்ற கூலி நிர்ணயத்துடன் உயர் இணைபை கொண்டுள்ளன. என்றும் தகைமைகள் சாராத தொழில் நிலைகள் எதிரான இணைபை கொண்டுள்ளதாகவும் முடிவுகள் பெறப்பட்டுள்ளது.

Itazans என்பவரால் 2003 இல் மேற்கொண்ட ஆய்வில் பல்கலைக்கழக கல்வி மற்றும் உயர்கல்வி நிலைமைகள் என்பன பெண்களிடையே கூலியை நிர்ணயத்தலில் செல்வாக்கு செலுத்துகின்றன. பல்கலைக்கழக கல்வியானது தொழிலாளர்கள் மத்தியில் முன்னர் பெற்ற சம்பளத்தினை விட கூடிய சம்பளத்தினை பெற்றுக்கொள்வதற்கு வழி ஏற்படுத்துகின்றது. கல்வி என்பது பால் ரீதியான சமமின்மைகளை குறைப்பதோடு, பொதுத்துறை சார்ந்த தொழில் நடவடிக்கைகளில் தமது தொழில்களை விரிவாக்கம் செய்து கொள்ள உதவுகின்றது. என்ற முடிவு பெறப்பட்டுள்ளது.

கல்வித்தகைமைகள் என்பது ஊழியப்படையில் பங்கு கொள்வோரினையும் சம்பள மட்டத்தினையும் தீர்மானிப்பதில் பங்களிப்புச் செய்கின்றது. ஏனெனில் கல்வி என்பது ஓர் நாட்டின் மனித மூலதனத்தை உருவாக்குவதில் முக்கிய பங்களிப்பினை வழங்குகின்றது. பல்வேறுபட்ட மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கல்வி என்பது ஓர் நாட்டின் மனித மூலதனத்தை உருவாக்குவதில் முக்கிய பங்களிப்பினை வழங்குகின்றது. பல்வேறுபட்ட மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் பல்வி என்பது உறுதியானதும் மற்றும் நேரானதும் ஆன தாக்கத்தை படை பங்கு கொள்ளலில் ஏற்படுத்துகின்றது. அந்த வகையினில் Chaufhey and Basit (2009) Magidu (2010), Stephans (2008) Olurant (2010) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை குறிப்பிடலாம்.

கல்வித்தகைமையுடன் இணைந்ததான ஆங்கில மொழி அறிவு என்பது பெண்களின் வருமபாத்தினை ஆங்கிலமொழி அறிவு என்பது பெண்களின் வருமானத்தினை தீர்மானிப்பதில் பிரதான காரணியாக உள்ளது. ஆங்கில மொழியறிவினை உடைய பெண்களின் வருமானம் ஆனது அவர்களின் சம்பளமட்டத்தை தீர்மானிப்பதில் மிக உயர்வான நேர் இணையை கொண்டுள்ளது.

Hateez மற்றும் Ahmed ஆகியோரால் 2002 இல் மேற்கொண்ட ஆய்வில் திருமணமான பெண்களிடையே தொழிற்படை பங்கேற்பு வீதம் மற்றும் பெண்களின் வருமானத்தினை தீர்மானிக்கும் காரணிகள் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வினில், பெண்களின் வீட்டுத்துறை செலவு பெற்றுக்கொள்ளும் வருமானம் என்பன அவர்கள் பெற்றுக்கொள்கின்ற தொழில் நிலைகளிலேயே தங்கியுள்ளது. எவ்வாறு இருந்தாலும் கல்விமட்டம் வயது, வீட்டுத்துறைக்கட்டமைப்பு (தனிக்குடும்பம், கூட்டுக்குடும்பம்) குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை என்பன பெண்களின் ஊழியப்படை பங்கேற்பு வீதத்தில் செல்வாக்கு செலுத்துகின்றது. எவ்வாறு இருப்பினும், வயது கல்வித்தகைமை மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை என்பன பெண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதத்தில் செல்வாக்கு செலுத்தும் பிரதான காரணியாகும். என்ற முடிவு பெறப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியலும் தரவு சேகரித்தலும்**

இவ் ஆய்வானது பெண்களின் வருமானத்தினைத் தீர்மானிக்கும் காரணிகள் தொடர்பாக பிரதேச செயலகத்தில் தொழில் புரியும் பெண்களின் எழுமாறான முறையில் குறித்த எண்ணிக்கையிலான 75பேர் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு ஆய்வுக்கான தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் ஆனவை சமூக விஞ்ஞானத்துன்னான புள்ளிவிபரவியல் பொறி (Spss) எனும் மென்பொதியூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது முதன் நிலைத்தரவுகளாக வினாக் கொத்துக்களின் வாயிலாக திரட்டிக் கொள்ளப்பட்ட தரவுகளும் இரண்டாம் நிலைத்தரவுகளாக இணையத்தளக்கட்டுரைகள், சஞ்சிகைகள், ஆண்டறிக்கைகள் என்பன காணப்படுகின்றன.

**ஆய்வின் கருதுகோள்**

H1 = ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஏனைய சாராமாறிகளினை கல்வித்தகைமையபனது வருமானத்தினை தீர்மானிப்பதில் கூடியளவு தாக்கம் செலுத்துகின்றது.

H2 = பெண்கள் பெறும் வருமானத்துக்கும் கல்வித் தகைமைக்கும் இடையே நேரான தொடர்பு காணப்படுகின்றது.

**எண்ணக்கருசட்டவாக்கம்**

| சார்மாறி | | சாராமாறி |
|---|---|---|
| பெண்களின் வருமான மட்டம் | → | கல்வித்தகைமை<br>தொழில் நிலைகள்<br>சமயம் மற்றும் கலாசாரகாரணிகள்.<br>வயது<br>சொத்துக்களின் பெறுமதி |

(மூலம் :- ஆய்வாளரால் உருவாக்கப்பட்டது)

**தரப்பகுப்பாய்வும் முடிவுகளும்**

ஆய்விற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையிலான இணைபுக்குணக பகுப்பாய்வினை நோக்கின்

| சாராமாறிகள் | இணைபு (%) |
|---|---|
| கல்வித்தகைமை | 73 % |
| தொழில் நிலைகள் | 35 % |
| வயது | 40 % |
| சமயமற்றும்கலாசாரகாரணிகள் | 37 % |
| சொத்துக்களின் மட்டம் | 51 % |
| திருமணநிலைமை | 49% |
| தொழில் அனுபவம் | 62% |

(மூலம் :- களஆய்வு - 2019)

மேற்காட்டப்பட்ட அட்டவணையின் படி நோக்கின் சார்மாறிக்கும், சாரா மாறிகளுக்கும் இடையிலான இணைபு வீதத்தை நோக்கின் ஏனைய காரணிகளை கல்வித்தகைமை என்பது செல்வாக்கு செலுத்தும் பிரதான காரணிகளாகவுள்ளது. இவ் இரு மாறிகளுக்கும் இடையிலான இணைபானது 73%ஆக காணப்படுகின்றது. தொழில் நிலைகள் என்பது பெண்களிடையே வருமானத்தினை தீர்மானிப்பதில் 23% செல்வாக்கு செலுத்துகின்றது. இதேபோல பெண்களின் வயது ஆனது வருமானத்தை தீர்மானிப்பதில் 40%செல்வாக்கு செலுத்துகின்றது. சமய நிலைகள் மற்றும் கலாசாரக் காரணிகள் ஆனது பெண்களிடையே வருமானத்தினை தீர்மானிப்பதில் பிரதான செல்வாக்கு செலுத்துகின்றது. உலக நாடுகளில் பல்வேறுபட்டோர் மேற்கொண்ட ஆய்வில் இம்முடிவு பெறப்பட்டுள்ளது. (சமய மற்றும் கலாசார காரணிகள் 40% செல்வாக்கு செலுத்துகின்றது.) இதேபோல ஒவ்வொரிடமும் உள்ள சொத்து மதிப்புக்கள் ஆனது வருமானத்தினை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துகின்றது. அவ்வகையினில் பெண்களிடையே உள்ள சொத்து மதிப்புக்கள் ஆனது 59% செல்வாக்கு செலுத்துகின்றது எனவே தொகுத்து நோக்கின், பெண்களிடையே வருமானத்தை தீர்மானிப்பதில் ஏனைய காரணிகளை விட கல்விநிலைமை என்பது கூடியளவில் செல்வாக்கு செலுக்குதின்றது. பெண்களின் திருமணநிலையானது (Maritial status) வருமானத்தினை தீர்மானிப்பதில் 49% செல்வாக்கு செலுத்துகின்றது இதே போல தொழிலில் இருந்தான அனுபவமானது வருமானத்தினை தீர்மானிப்பதில் 62% செல்வாக்கு செலுத்துகின்றது

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சாராமாறிகள் ஆனவை சார்மாறியில் ஏற்படுத்தும் தாக்கத்தினைக் காட்டும் பிற்செலவு சமன்பாட்டில் மூலமான பகுப்பாய்வினை நோக்கின்,

$$Y = \beta_0 + \beta_1 X_1 + \beta_2 X_2 + \beta_3 X_3 + \beta_4 X_4 + \beta_5 X_5 + \beta_6 X_6 + e$$

Y= (W) = பெண்களின் வருமானம் (சார்மாறி)

X1 :- அனுபவம்

x2 :- கல்வித்தகைமை மட்டம்

X3 :- சமயம் மற்றும் கலாசாராக்காரணிகள்

X4;- சொத்துக்களின் பெறுமதி

X5 :- திருமண நிலை

X6 :- தொழில் நிலைகள்

| மாறிகள் | பிற்செலவுக்குணக மதிப்பான்கள் | T Statistics | P- value |
|---|---|---|---|
| தொழில் அனுபவம்<br>திருமண நிலை<br>சமயம்<br>சொத்துக்களின் நிமைமை<br>தொழில் நிலைமைகள்<br>கல்வித்தகைமை மட்டம் | 0.2576***<br>0.4159***<br>0.2179***<br>0.5612***<br>0.1275***<br>0.6942** | 0.123<br>0.290<br>0.218<br>0.343<br>0.562<br><br>0.149 | 0.115<br>0.112<br>0.003<br>0.215<br>0.001<br>0.001 |

***1% பொருண்மைமட்டம் **; 5% பொருண்மை மட்டம்
மூலம் : கள ஆய்வுத் தகவல் (2018)

துணிவுக்குணகம் (R.Square)= 0.8317
ஒழுங்கமைப்பட்ட துணிவுக்குணகம் = 0.8259
F பெறுமதி = :135.48
நிகழ்தகவுப் பெறுமதி 0.0000

அட்டவணையின் படி நோக்கின் தொழில் அனுபவமானது பெண்களின் வருமானத்தை தீர்மானிக்கும் பிற்செலவுக்குணக மதிப்பானின் பெறுமதியானது 0.2576 என்பதாக உள்ளது. இது பெண்களின் வருமானத்தோடு நேரக்கணிய தாக்கத்தை கொண்டுள்ளது. திருமணநிலையானது பெண்களின் வருமானத்தை தீர்மானிக்கின்ற பிற்செலவுக்குணக மதிப்பானின் பெறுமதியானது 0.4159 ஆக உள்ளதோடு நேர்க்கணிய தாக்கத்தை கொண்டுள்ளது இதே போல சமயம் மற்றும் கலாசார காரணிகள் பெண்களின் வருமானத்தை தீர்மானிக்கின்றமைக்கான பிற்செலவுக்குணக மதிப்பானின் பெறுமதியானது 0.2129 ஆக உள்ளது. எனினும் ஏனைய சாராமாறிகளை விட சமயம்மற்றும் கலாசாரக் காரணிகள் ஏற்படுத்தும் தாக்கமானது மிகக் குறைந்தளவியே உள்ளது.சொத்துக்களின் நிலைமையானது பெண்களின் வருமானத்தினை தீர்மானிக்கின்றமைக்கான பிற்செலவுக்குணக

மதிப்பானின் பெறுமதியானது 0.5612 ஆக உள்ளது. இதேபோல இது நேர்க்கணிய தாக்கத்தை கொண்டுள்ளது. தொழில் நிலைமைகள் பெண்களின் வருமானத்தினை தீர்மானிப்பதற்கான பிற்செலவுக்குணக மதிப்பானின் பெறுமதியானது 0.1245ஆக உள்ளது.

ஏனைய சாராமாறிகளைவிட கல்வித்தகைமையானது வருமானத்தை தீர்மானிப்பதில் உயர்ந்த தாக்கத்தைக் கொண்டுள்ளது. கல்வித்தகைமையானது வருமானத்தினை தீர்மானிக்கின்ற மைக்கான பிற்செலவுக்குணக மதிப்பானின் பெறுமதிகளை நோக்கின் ' 0.6942 அக உள்ளதோடு, இரண்டாம் நிலைக் கல்வியானது 0.3214 என்ற பிற்செலவுக் குணகபெறுமதியை கொண்டுள்ளது. அதாவது இரண்டாம்நிலை கல்வியில் ஏற்படும் முன்னேற்றமானது பெண்களின் வருமானத்தினை 32% அலகில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் இதேபோல உயர்கல்வியானது வருமானத்தினை தீர்மானிப் பதற்கான பிற்செலவுக்குணக மதிப்பானின் பெறுமதியானது 0.4145 ஆக உள்ளது. இதேபோல பட்டச்சான்றிதழுடன் கூடிய கல்வித்தகைமையானது வருமானத்தினை தீர்மானிப்பதற்கான பிற்செலவுக்குணக மதிப்பானின் பெறுமதியானது 0.8147 ஆக உள்ளது. முடிவுகளை தொகுத்து நோக்கின் கல்வித்தகைமையானது வருமானத்தினை தீர்மானிப்பதில் பிரதான செல்வாக்கு செலுத்துகின்றது. அதாவது பட்டத்துடன் கூடிய கல்வித்தகைமையானது வருமானத்தினை தீர்மானிப்பதில் கூடியளவு தாக்கம் செலுத்துகின்றது. பட்டப்பின் படிப்புக்கள் ஆனவை ஏனைய கல்வித்தகைமைகளை விட வருமானத்தினை தீர்மானிப்பதலி கூடியளவு தாக்கம் செலுத்துகின்றது.அனைத்து மாறிகளையும் உள்ளடக்கிய $சு_2$ ஆனது 0.83 ஆக உள்ளது. அதாவது ஆய்வில் உள்ளடக்கப்பட்ட மாறிகள் ஆனவை வருமானத்தினை

தீர்மானிப்பதில் 83% ஆன செல்வாக்கை செலுத்துகின்றது. ஏனைய 13% ஆனவை ஆய்வில் உள்ளடக்கப்படாத ஏனைய மாறிகள் விளக்குகின்றது.

அடுத்து பெண்களின் பெறும் வருமானத்துக்கும் அவர்களின் கல்வித்தகைமைக்கும் இடையே நேரான தொடர்பு காணப்படுகின்றது. அதாவது பெண்களின் கல்வித்தகைமை அதிகரித்த அதிகரிக்க அவர்கள் பெறும் வருமானமும் அதிகரித்துச் செல்கின்றது. எனவே ஆய்வு குறித்து முன்வைக்கப்பட்ட கருதுகோள்களான ஏனைய சாரா மாறிகளை விட கல்வித்தகைமை ஆனது வருமானத்தினை தீர்மானிப்பதில் கூடியளவு தாக்கம் செலுத்துகின்றது. என்ற கருதுகோளும், கல்வித்தகைமைக்கும் வருமானத்துக்கும் இடையில் நேரான தொடர்பு காணப்படுகின்றது என்ற கருதுகோளும் நிரூபிக்கப்பட்டுள்ளதனைக் காணலாம்.

**பரிந்துரைகள்**

பெண்களிடையே சமூக, பொருளாதார ரீதியாக ஏற்படும் முன்னேற்றமானது ஒரு நாட்டின் அபிவிருத்தியிலும் பொருளாதார ரீதியாக ஏற்படும் வளர்ச்சியும் செல்வாக்கு செலுத்துகின்றது. அந்த வகையில் தொழில் செய்கின்ற பெண்களிடையே வருமானத்தினை தீர்மானிக்கும் காரணிகளில் கல்வித்தகைமை என்பது செல்வாக்கினை கூடியளவில் செலுத்துகின்றது. சொத்து நிலைமைகள், கலாசாரம் சேர்ந்த காரணிகளும் பெண்களிடையே வருமானத்தினை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்தினாலும் கல்வித்தகைமை என்பதே கூடியளவில் செல்வாக்கு செலுத்துகின்றது. பொதுவாகவே பெண்களிடையே தொழிற்படை பங்களிப்பு வீதம் என்பது பல்வேறுபட்ட காரணிகளால் தீர்மானிக்கப்பட்டது. இக் காரணிகளில் ஏற்படும் மாற்றம் பெண்களின் தொழில் பங்கேற்பு வீதத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி வருமானத்திலும் செல்வாக்கு செலுத்தும்.

Varo (2017) மேற்கொண்ட ஆய்வில் பெண்களின் தொழிற்படை பங்கேற்பில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டுள்ளார். அந்த வகையினில் விவாகநிலை கல்வித்தகைமை வயது, குழந்தைகளின் எண்ணிக்கை வருமான மட்டம் வீட்டுத்துறை சார்ந்த வேலைகள் போன்ற மாறிகளை சாராமாறிகளாக கொண்டு ஆய்வினை மேற்கொண்டுள்ளார். கல்வித்தகைமை அதிகரிக்க தொழிற்படை பங்கேற்பு வீதம் அதிகரிப்பதாகவும், வயது மட்ட அடிப்படை 25 தொடக்கம் 30 வயது வரையான காலத்தில் பெண்களிடையே தொழில் பங்கேற்பு வீதம் உயர்வாக இருப்பதாகவும் 30 வயதுக்கு பின்பு எதிரான தொடர்பு காணப்படுவதாகவும், குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது பெண்களின் தொழில் மட்டம் குறைவடைவதாகவும் கூறப்பட்டுள்ளது.

## References

Lynn Bennett (2006) The Role of women income Production and intra house hold allocation of resourcs as a delerminant of child nutrition and health. Food and Nutrition Bulletin, Vol 10 No 3

Chang lee (2015) Factors Determining income among real Estate Sales Persons. The impact of rndvididual conditions, Franchisres and regular chains.

A.Haffeezl E.AHMAD (2009) 'factors deter mining the labour force participation Decision of Educated married women in a district of punjab pakisthan economic and social review. volume xl No 1

Bhattarai k Wisiewski .T (2000) 'Determinants of wages and labour supply in the U.K www.Research gate net/ publication / 5069393

Taseevan o, Altas.D Turgut (2016) the Deter minants of female labour force Participation.for OECD countries.

Kompa k Witkowsha .D (2018) Factors affecting men's and women's earnings in poland Economic Research journal.

varol F.(2017) The Determinants of labour force participation of women in Turkey A Binary logit analysis Journal of History culture Art Research vol6- No – 2